**செய்தி வெளியீடு எண் :728** **நாள்: 06.05.2022**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூக நீதி அளவுகோல்கள் முறையாக முழுமையாக பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க சமூக நீதிக் கண்காணிப்புக் குழு ஒன்றினை பேராசிரியர் திரு.சுப.வீரபாண்டியன் அவர்களின் தலைமையில் அமைத்து உத்தரவிட்டார்.

சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு சொந்தமான கட்டிடத்தில், 2243 சதுர அடி பரப்பளவுடைய அறையில் சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவிற்கான புதிய அலுவலகத்தை மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் அவர்கள் இன்று (06.05.2022) காலை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பேராசிரியர் திரு. சுப. வீரபாண்டியன், உறுப்பினர்கள் முனைவர் கே. தனவேல், இ.ஆ.ப., (ஓய்வு), பேராசிரியர் முனைவர். சுவாமிநாதன் தேவதாஸ், கவிஞர் திரு. மனுஷ்யபுத்திரன், திரு.ஏ. ஜெய்சன், பேராசிரியர் முனைவர் ஆர்.இராஜேந்திரன், திரு.கோ.கருணாநிதி, மருத்துவர் சாந்தி ரவீந்திரநாத் மற்றும் சமூக சீர்திருத்தத்துறையின் முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in